1996 ஜூலை 24 ]

எங்கேயும் கட்டணத்தை உயர்த்தவில்லை.

*முற்பகல் 10-05*

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையால் பாதிக்கப்படக் கூடியவர்கள், தகுதி வாய்ந்த மாணவர்கள். திடீரென ரூ.8,000-லிருந்து 20,000 ரூபாயாக உயர்த்தப்படுகின்ற காரணத்தினால் அதைச் செலுத்த முடியாமல் பல மாணவர்கள் மருத்துவப் படிப்பைத் தொடர முடியுமா என்ற ஒரு நிலை உருவாகி இருக்கிறது. எனவே, பாதிக்கப்படக் கூடிய மாணவர்களை அரசுக் கல்லூரிகளுக்குள்ளேயே எடுத்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறதா என்பதை அமைச்சரிடத்திலேயிருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவரவர்களே, இதிலே அரசாங்கம் தலையிட முடியாது. அது மட்டுமல்ல, கடந்த ஆண்டு 1993-94-இல் Payment Seats-க்கு ரூ.1,40,000 ஆக இருந்ததை ரூ. 75,000 ஆகக் குறைத்திருக்கிறார்கள். அதேநேரத்திலே Free Seats-க்கு ரூ. 8,000 என்பதை ரூ.20,000 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். இதில் சம்பந்தப்பட்ட மாணவர்கள்தான் உச்ச நீதிமன்றத்திடம் முறையிட்டு தங்களுக்கு நியாயம் கேட்க வேண்டுமே தவிர தமிழக அரசாங்கம் இதிலே ஒன்றும் செய்ய முடியாது.

## 3. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1996

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவு, அறிமுகம் செய்தல். 1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

"1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க. (ஆம்)

மறுப்போர் இல்லை என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. தகவல் கோரல்

### (அ) பெரியாறு பிரதானக் கால்வாய்ப் பாசன விவசாயத்திற்குத் தண்ணீர் திறந்து விடுதல் குறித்து

**திரு. என். ஆர். அழகர்ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே சிறிது நேரத்திற்கு முன்னால் பேசிய காவிரிப் பிரச்சினையைப் போன்று, அங்கே பெரியாறு நீர்ப்பாசனத் திட்டத்தில் சுமார் 15,000 ஏக்கர் நிலத்தில் நடவு செய்ய முடியாமல் அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். தற்சமயம் மழை அதிகமாகப் பெய்து பெரியாறு நீர்ப் பாசனத் திட்டத்தினுடைய அணையில் நீர் மட்டம் உயர்ந்து இருக்கக்கூடிய இந்த நிலையில் பிரதான கால்வாய்களிலும், மற்றக் கிளை வாய்க்கால்களிலும் தண்ணீர் திறந்து விட அரசு உடனடியாக ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, உறுப்பினர் அழகர்ராஜா அவர்கள் வைத்த கோரிக்கையைப் போன்றுதான், பெரியாறு பிரதானக் கால்வாயில் பாசனம் பெறுகிற விவசாயிகளிடத்தில் இருந்தும் தண்ணீர் பிரதானக் கால்வாயிலே திறந்து விட வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது. அதேபோன்ற கோரிக்கையை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையைக் குறித்து இராத்திரியே